# சமூக நலத் திட்டங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கு 25% கூடுதல் பலன்

## மத்திய அரசு பதிலளிக்க உச்சநீதிமன்றம் உத்தரவு

**புது தில்லி, செப்25:** சமூக நலத் திட்டங்களில் மற்றவர்களுக்கு கிடைக்கும் பலன்களைக் காட்டிலும் மாற்றுத்திறனாளிகளுக்கு 25 சதவீதம் கூடுதலாக அளிக்கக் கோரும் மனு மீது பதிலளிக்குமாறு மத்திய அரசுக்கு உச்சநீதிமன்றம் திங்கள்கிழமை உத்தரவிட்டது.

தில்லியைச் சேர்ந்த பூமிகா அறக்கட்டளை சார்பில் இது தொடர்பான மனு தாக்கல் செய்யப்பட்டது. அதில், 'மாற்றுத்திறனாளிகள் தனியாகவோ அல்லது சமூகமாகவோ வாழவும், அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையிலும் அரசு அறிமுகம் செய்யும் நலத் திட்டமானது, மாற்றுத்திறன் அல்லாத நபர்களுக்கு அரசு அறிமுகம் செய்யும் அதேபோன்ற சமூகநலத் திட்டம் அளிக்கும் பலனைக் காட்டிலும் 25 சதவீதம் கூடுதலாக இருக்க வேண்டும் என்று, மாற்றுத்திறனாளி உரிமைகள் சட்டம் 2016-இந் பிரிவு



24(1) குறிப்பிடுகிறது. இதை அரசு நடைமுறைப்படுத்த உத்தரவிட வேண்டும்' என கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்த மனு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தலைமையிலான அமர்வு முன்பு திங்கள்கிழமை விசாரணைக்கு வந்தது.

அப்போது மனுதாரரும் பூமிகா அறக்கட்டளை தலைவருமான ஜெயந்த் சிங், 'சட்டப் பிரிவில் குறிப்பிட்டுள்ளபடி மற்றவர்களுக்கு அளிக்கப்படும் சமூக நலத் திட்டங்களின் பலன்களைக் காட்டிலும், மாற்றுத்திறனாளிகளுக்கு 25 சதவீதம் கூடுதல் பலன்களுடன் திட்டத்தை அறிவிக்க அரசுக்கு உத்தரவிட வேண்டும்' எனக் கோரினார்.

இதைக் கேட்ட நீதிபதிகள், 'எந்தெந்த திட்டங்களில் 25 சதவீத கூடுதல் பலன்களை எதிர்பார்க்கிறீர்கள்?' என்று கேள்வி எழுப்பினர்.

அதற்கு, பல்வேறு மாநிலங்களில் வழங்கப்படும் மாற்றுத்திறனாளிகளுக்கான ஓய்வூதியத் திட்டத்தை மனுதாரர் குறிப்பிட்டார்.

இதைக் கேட்ட நீதிபதிகள், 'அனைத்து மாநிலங்களிடம் விளக்கம் கேட்டு நோட்டீஸ் பிறப்பிப்பதற்குப் பதிலாக, மத்திய அரசுக்கு மட்டும் நோட்டீஸ் பிறப்பிக்கிறோம்' என்று குறிப்பிட்ட நீதிபதிகள், இந்த விவகாரம் தொடர்பான விசாரணையை 4 வாரங்களுக்குப் பிறகு ஒத்திவைத்தனர்.

# தமிழகம் முழுவதும் தொழில்நிறுவனங்கள் போராட்டம்: ரூ.1,200 கோடி இழப்பு

**சென்னை/சேலம், செப்.25:** மின் கட்டண உயர்வை திரும்ப பெறக் கோரி, தமிழகம் முழுவதும் உள்ள தொழில் நிறுவனங்கள் திங்கள் கிழமை நடத்திய ஒருநாள் கதவடைப்பு போராட்டத்தால் ரூ.1200 கோடி வரை இழப்பு ஏற்பட்டுள்ளது.

தமிழகத்தில் தொழில்நிறுவனங்களுக்கான மின்கட்டணம் பல மடங்கு உயர்த்தப்பட்டுள்ளது. இதன்படி, தாழ்வழுத்த நிலை கட்டணமாக 12 கிலோ வாட் வரையிலான மின்சாரத்துக்கு ரூ.72-ம், 50 கிலோ வாட் வரை ரூ.77-ம், 50 முதல் 112 கிலோ வாட் வரை ரூ.153-ம் , 112 முதல் 150 கிலோ வாட் வரை ரூ.562-ம் வசூலிக்கப்படுகிறது.

இந்தக் கட்டணத்தைக் குறைத்து பழைய கட்டண அடிப்படையிலேயே வசூலிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழகம் முழுவதும் உள்ள குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் திங்கள்கிழமை ஒரு நாள் கதவடைப்பு போராட்டத்தில் ஈடுபட்டன.

போராட்டத்துக்கு, தமிழ்நாடு தொழில்துறை மின்நுகர்வோர் கூட்டமைப்பு, கோவை சிட்கோ உற்பத்தியாளர்கள் சங்கம், தொழில்நிறுவன மின் நுகர்வோர் கூட்டமைப்பு, இந்திய தொழில் முனைவோர் சங்கம், தமிழ்நாடு தொழில் அமைப்புகள் உள்ளிட்ட பல்வேறு தொழில் கூட்டமைப்பினர் ஆதரவு தெரிவித்திருந்தனர்.

இதன்காரணமாக, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், சென்னை, அம்பத்தூர் தொழிற்பேட்டை, பட்டரவாக்கம் உள்ளிட்ட பகுதிகளிலுள்ள 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழில்நிறுவனங்கள் மூடப்பட்டன. கோவை மாவட்டத்தில் சிட்கோ, கணபதிபாளையம், இடையர் பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் செயல்பட்டு வரும் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாகனம் மற்றும் கிரைண்டர், மிக்ஸி உதிரிபாகங்கள் உற்பத்தி நிறுவனங்கள் என ஆயிரக்கணக்கான நிறுவனங்களும் இந்த போராட்டம் காரணமாக மூடப்பட்டிருந்தன.

இதுபோல திருப்பூர் மாவட்டத்துக்குள்பட்ட பனியன் நிறுவனங்கள், விசைத்தறி கூடங்கள், பனியன் உற்பத்தி சார்ந்த சைமா, டீமா, டெக்பா, நிட்மா, சாய ஆலை உரிமையாளர்கள் சங்கம் உள்ளிட்ட 19-க்கும் மேற்பட்ட சங்கத்தினர் இதற்கு ஆதரவு தெரிவித்திருந்ததால், சுமார் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட நிறுவனங்கள் மூடப்பட்டன. இதுபோல சேலத்தில் உள்ள அரிசி ஆலைகள், எண்ணெய் ஆலைகள் உள்ளிட்டவையும் இந்த போராட்டத்தில் ஈடுபட்டன.

தமிழகம் முழுவதும் நடைபெற்ற இந்த போராட்டத்தால், தமிழகத்தில் நாள் ஒன்றுக்கு ரூ.1200 கோடிக்கும், சென்னையில் ரூ.350 கோடிக்கும் இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும், தமிழக அரசு எங்கள் கோரிக்கை மீது உரிய நடவடிக்கையை உடனடியாக எடுக்க வேண்டும் என்றும் இல்லையென்றால் அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து கலந்தாலோசித்து முடிவு எடுக்கப்படும் என தமிழ்நாடு தொழில் அமைப்பு நிர்வாகிகள் தெரிவித்தனர்.



வேலைநிறுத்தப் போராட்டம் காரணமாக சேலம், நெத்திமேடு பகுதியில் திங்கள்கிழமை ஊழியர்களின்றி வெறிச்சோடி காணப்பட்ட அரிசி ஆலை.

# புலிகள் உயிரிழப்பு: உதகையில் தேசிய குழு விசாரணை



உதகை வன அலுவலகத்தில் விசாரணை முடித்துவிட்டு வரும் தேசிய புலிகள் ஆணைய அதிகாரிகள்.

**குன்னூர், செப். 25:** நீலகிரி மாவட்டத்தில் 10 புலிகள் உயிரிழந்த விவகாரம் தொடர்பாக தேசிய புலிகள் ஆணைய குற்றப் பிரிவு ஐ.ஜி. முரளி குமார் தலைமையிலான குழுவினர் உதகையில் திங்கள்கிழமை விசாரணை மேற்கொண்டனர்.

நீலகிரி மாவட்டம், மேற்குத் தொடர்ச்சி மலைத்தொடரில் நிலவும் காலநிலை மற்றும் வாழ்விடம் உகந்ததாக இருப்பதால் இங்கு நூற்றுக்கணக்கான புலிகள் வசிக்கின்றன.

இப்பகுதியில் கடந்த 40 நாள்களில் 6 குட்டிகள் உள்பட 10 புலிகள் உயிரிழந்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இந்நிலையில் புலிகள் உயிரிழப்புகளுக்கான காரணம், நீலகிரி மாவட்ட வனப் பகுதியில் இந்த ஆண்டில் மட்டும் இறந்துள்ள மொத்த புலிகள் மற்றும் யானைகள் குறித்து தேசிய புலிகள் ஆணைய குற்றப் பிரிவு ஐ.ஜி. முரளிகுமார் தலைமையில் மத்திய அரசின் வன விலங்கு குற்றத் தடுப்பு பிரிவு தென் மண்டல இயக்குநர் கிருபாசங்கர், மத்திய வன விலங்கு ஆராய்ச்சி மைய மூத்த விஞ்ஞானி ரமேஷ் கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்டோர் உதகையில் விசாரணை மேற்கொண்டனர். அவர்கள், உதகை ஃபிங்கர் போஸ்ட் பகுதியில் அமைந்துள்ள வன ஓய்வு விடுதியில் கள இயக்குநர் வெங்கடேஷ், மாவட்ட வன அலுவலர் கௌதம், வனச் சரகர்கள் ஆகியோரிடம் சுமார் ஒரு மணி நேரம் விசாரணை நடத்தினர்.

இதைத்தொடர்ந்து, உதகை அருகே சின்ன குன்னூர் பகுதியில் 4 புலிக் குட்டிகள் இறந்த பகுதிக்குச் சென்று ஆய்வு செய்த குழுவினர் அப்பகுதியில் பணியாற்றிய தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களிடம் தகவல்களைக் கேட்டறிந்தனர்.

இதனைத் தொடர்ந்து இரண்டு புலிகள் உயிரிழந்த அவலாஞ்சி பகுதிக்கு சென்ற குழுவினர் புலிக்கு விஷம் வைத்த பகுதியை நேரில் பார்வையிட்ட பிறகு நடுவட்டம் தனியார் தேயிலைத் தோட்டத்தில் புலி மர்மமான முறையில் உயிரிழந்த பகுதியில் ஆய்வு மேற்கொண்டனர்.

ஓர் ஆண்டில் யானைகள் மற்றும் புலிகள் உயிரிழப்பு விவரங்களை சேகரிக்க உள்ள இக்குழுவினர், அது குறித்த விரிவான அறிக்கையை தில்லியில் உள்ள தேசிய புலிகள் ஆணையத்திடம் சமர்ப்பிக்க உள்ளதாக தெரிவித்தனர். மேலும் இந்த விவகாரத்தில் பல முக்கிய வன அதிகாரிகள் பணியிட மாற்றம் செய்ய வாய்ப்புள்ளதாகத் தெரிகிறது.

# பொருளாதார சவால்!

உலகின் மிக வேகமாக வளர்ச்சியடையும் பொருளாதாரமாக இந்தியா கணிக்கப்படுகிறது என்பது என்னவோ உண்மை. சீனாவின் 6.3% வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது, நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் 7.8% வளர்ச்சியைக் கண்டிருக்கும் இந்தியா, சர்வதேச பொருளாதார வல்லுநர்களால் கூர்ந்து கவனிக்கப்படுகிறது.

சர்வதேச அளவில் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் நிகழ்வுகள், இந்தியா எதிர்பார்க்கும் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போடாவிட்டாலும், பல தடைகளை ஏற்படுத்தக்கூடும் என்று தோன்றுகிறது. மிக முக்கியமாக, சர்வதேச சந்தையில் ஏற்பட்டிருக்கும் கச்சா எண்ணெய் விலையேற்றம், சர்வதேச பொருளாதாரத்தை மட்டுமல்ல, இந்தியாவின் வளர்ச்சியையும் பாதிக்கக்கூடும்.

கடந்த மூன்று மாதங்களாகத் தொடர்ந்து அதிகரித்து வரும் கச்சா எண்ணெய் விலை மீண்டும் வரலாறு காணாத பீப்பாய்க்கு 100 டாலர் விலையை எட்ட எத்தனிக்கிறது. ஜூன் மாதத்தில் தொடங்கி கடந்த மூன்று மாத கச்சா எண்ணெய்யின் சராசரி விலை பீப்பாய்க்கு 95.6 டாலர்.

இந்த விலை உயர்வுக்கு முக்கியமான காரணம், 'முறையற்ற விற்போர் சேர்க்கை' (கார்ட்டலைசேஷன்). அதாவது, விற்பனையாளர்கள் ஒருங்கிணைந்து விலை நிர்ணயம் செய்யும் தவறான வர்த்தக முறை. நடப்பாண்டில் நாளொன்றுக்கு 10.22 கோடி பீப்பாய் கச்சா எண்ணெய் தேவைப்படும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. அதாவது, கடந்த நிதியாண்டுடன் ஒப்பிடும்போது, நாளொன்றுக்கு 20 லட்சம் பீப்பாய் கூடுதலாகத் தேவைப்படுகிறது.

கச்சா எண்ணெய்யின் தேவை அதிகரித்திருப்பதைத் தங்களுக்கு சாதகமாக்கிக் கொள்ள, கச்சா எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகள் முனைந்திருக்கின்றன. சவூதி அரேபியா தலைமையிலான கச்சா எண்ணெய் உற்பத்தி செய்யும் வளைகுடா நாடுகளும், ரஷியாவும் தங்களது உற்பத்தியைக் குறைப்பதன் மூலம், சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய்க்குத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தி, விலையை அதிகரிக்க முற்பட்டிருக்கின்றன.

இந்த முறையற்ற விற்போர் சேர்க்கையால், கச்சா எண்ணெய்யின் விலை வருங்காலத்தில் குறைவதற்கான வாய்ப்பு தெரியவில்லை. இதனால், இந்தியாவில் பெட்ரோல், டீசல் இவற்றின் சில்லறை விலை உடனடியாக உயர்ந்து விடாது என்பது வேண்டுமானால் ஆறுதலாக இருக்கலாம்.

ஏற்கெனவே சமையல் எரிவாயு உருளையின் விலை குறைக்கப்பட்டிருக்கிறது. அடுத்த 16 மாதங்களுக்கு பெட்ரோல், டீசல் நிலையங்களில் சில்லறை விற்பனை விலையில் மாற்றம் நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது. பொதுத் தேர்தலுக்கு சில மாதங்களே இருக்கும் நிலையில், இந்த முடிவில் மாற்றம் ஏற்படுவதற்கான வாய்ப்பு இல்லை.

EVA STALIN IAS ACADEMY

உக்ரைன் போர் தொடங்கியது முதல், ஏனைய ஆசிய நாடுகளைவிடக் குறைந்த விலையில் நாம் ரஷியாவிடம் இருந்தும், ஈராக்கிடமிருந்தும்  கச்சா எண்ணெய்யை வாங்கிக் கொண்டிருக்கிறோம். அதனால், இலங்கை, பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகளைப் போல, பெட்ரோல், டீசலுக்கு நாம் தட்டுப்பாட்டை எதிர்கொள்ள மாட்டோம்.

இந்தியா எதிர்கொள்ள இருக்கும் பிரச்னைகள் வேறுவிதமானவை. உற்பத்தியாளர்களின் இடுபொருள் விலைகள் அதிகரிக்கக் கூடும். அதனால் உற்பத்திச் செலவும், ஏற்றுமதி விலையும் அதிகரிக்கும். ஏற்றுமதியில் ஏற்படும் தளர்வோ, பாதிப்போ நடப்புக் கணக்குப் பற்றாக்குறையை அதிகரிக்கும்.

நிதிச் சந்தையில் கடனுக்கான வட்டி விகிதம் அதிகரிக்கும். விரைவில் சில மாநில சட்டப்பேரவைகளுக்கும், அடுத்த ஆண்டு மக்களவைக்கும் தேர்தல் நடக்க இருப்பதால், பொருளாதாரம் குறித்துக் கவலைப்படாமல் நமது அரசியல் கட்சிகள், குறிப்பாக மாநில அரசுகள், நிதிக் கட்டுப்பாட்டைக் கைவிட்டுப் பல சலுகைகளையும், மானியங்களையும் அறிவிக்கக் கூடும். இவையெல்லாம், பொருளாதார வளர்ச்சியை பாதிப்பதுடன், விலைவாசி ஏற்றத்துக்கும் வழிகோலக்கூடும்.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது ஆகஸ்ட் மாத ஏற்றுமதியின் அளவு 6.9% குறைவு. இறக்குமதியின் அளவும் குறைந்திருந்தாலும், நமது வர்த்தகப் பற்றாக்குறை கடந்த பத்து மாதங்களில் மிக அதிகமான அளவை (24.2 பில்லியன் டாலர்) ஆகஸ்ட் மாதத்தில் எட்டியது. இது மேலும் அதிகரித்தால், அதன் விளைவை ரூபாய் மதிப்பு எதிர்கொள்ளும். ஏற்கெனவே டாலருடன் ஒப்பிடும்போது, இந்திய ரூபாயின் மதிப்பு வரலாறு காணாத வீழ்ச்சியைக் காண்கிறது. இந்த மதிப்புக் குறைவு அதிகரித்தால், அந்நிய முதலீட்டாளர்கள் இந்திய சந்தையில் முதலீடு செய்வதைத் தவிர்ப்பார்கள்.

அமெரிக்க மத்திய வங்கி தனது வட்டி விகிதத்தைக் குறைக்கத் தயாராக இல்லை. அதனால், அந்நிய முதலீட்டாளர்கள் அமெரிக்காவிலிருந்து தங்களது முதலீட்டை வெளியே எடுத்துச் செல்லத் தயங்குகிறார்கள். தனது ரூபாய் மதிப்பை இழந்து கொண்டிருக்கும் இந்தியாவில் முதலீடு செய்வதில் அவர்கள் மேலும் தயக்கம் காட்டக்கூடும்.

வழக்கமான விலைவாசி உயர்வுகள் போதாதென்று, இந்த ஆண்டு உணவுப் பொருள்களின் விலைவாசி மிகப் பெரிய சவாலாக மாறியிருக்கிறது. பணப் புழக்கத்தை அதிகரிப்பதன் மூலமோ, ரிசர்வ் வங்கியின் வட்டி விகிதத்தை நேரடியாகவோ, மறைமுகமாகவோ அதிகரிப்பதன் மூலமாகவோ உணவுப் பொருள்களின் விலைவாசியையும், பெட்ரோல், டீசல் விலை உயர்வையும் எதிர்கொள்ள முடியாது.

சர்வதேச அளவில் காணப்படும் பொருளாதார மந்தநிலைக்கு இந்தியா விதிவிலக்காக இருக்க முடியாது. இந்திய பொருளாதாரம் இந்த சவால்களை எப்படி எதிர்கொள்ளப் போகிறது என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்!

EVA STALIN IAS ACADEMY

# நிறைவேறியது மகளிர் மசோதா

**எஸ். ராஜாராம்**

மக்களவையிலும் மாநிலசட்டப்பேரவைகளிலும் மகளிருக்கு 33 சதவீத இடஒதுக்கீடு வழங்க வகைசெய்யும் அரசமைப்பு சட்டத் திருத்த மசோதா 27 ஆண்டுகால காத்திருப்புக்குப் பின்னர் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேறியுள்ளது. 'நாரி சக்தி வந்தன் அதினியம்' (பெண்களுக்கு அதிகாரமளித்தல்) எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த சட்ட மசோதா பல தடைகளைத் தாண்டி ஐந்தாவது முயற்சியில்தான் வெற்றி பெற்றிருக்கிறது.

முன்னாள் பிரதமர் தேவெ கௌடா தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசு கடந்த 1996-இல் இந்த மசோதாவை முதல்முறையாக மக்களவையில் அறிமுகம் செய்தது. அரசமைப்புச் சட்டத்தின் 81-ஆவது திருத்த மசோதாவான அதில் இருந்த சில ஷரத்துகளை வலுப்படுத்தும் நோக்கில் அது நாடாளுமன்ற கூட்டுக் குழுவின் ஆய்வுக்கு அனுப்பப்பட்டது. 1996-ஆம் ஆண்டு 11-ஆவது மக்களவை கலைக்கப்பட்டதையடுத்து, அந்த மசோதா காலாவதியானது.

1998-ஆம் ஆண்டு டிசம்பர் 14-ஆம் தேதி வாஜ்பாய் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு மீண்டும் மகளிர் இடஒதுக்கீட்டு மசோதாவை (அரசமைப்புச் சட்டத்தின் 84-ஆவது திருத்த மசோதா) மக்களவையில் தாக்கல் செய்தது. 12-ஆவது மக்களவை கலைக்கப்பட்டதையடுத்து அந்த மசோதாவும் காலாவதியானது.

மூன்றாவது முயற்சியாக 1999-ஆம் ஆண்டு டிசம்பர் 23-ஆம் தேதி பிரதமர் வாஜ்பாய் தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசு மக்களவையில் மகளிர் இடஒதுக்கீடு மசோதாவை (அரசமைப்புச் சட்டத்தின் 85-ஆவது திருத்த மசோதா) அறிமுகம் செய்தது. ஆனால், அரசியல் கட்சிகளிடையே ஒருமித்த கருத்து இல்லாததால் அந்த மசோதா தொடரப்படவில்லை.

கடைசியாக 2008-ஆம் ஆண்டு பிரதமர் மன்மோகன் சிங் தலைமையிலான ஆட்சியின்போது மாநிலங்களவையில் மகளிர் இடஒதுக்கீட்டு மசோதா அறிமுகப்படுத்தப்பட்டு, 2010-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது. பின்னர், அது மக்களவையில் நிறைவேற்றப்படாத நிலையில் மக்களவை கலைக்கப்பட்டதால் காலாவதியானது.

இப்போது பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு தாக்கல் செய்த மகளிர் இடஒதுக்கீட்டு மசோதா மக்களவையில் கிட்டத்தட்ட ஒருமனதாகவும், மாநிலங்களவையில் எதிர்ப்பே இல்லாமலும் நிறைவேறியிருக்கிறது. குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்ததும் இது சட்ட வடிவம் பெறும்.

2021-ஆம் ஆண்டு நடத்தப்பட்டிருக்க வேண்டிய மக்கள்தொகை கணக்கெடுப்பு, கரோனா பெருந்தொற்றுப் பரவல் காரணமாக நடத்தப்படவில்லை. அந்தக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டு, அதன் அடிப்படையில் தொகுதி மறுவரையறை மேற்கொள்ளப்பட்ட பிறகு மகளிர் இடஒதுக்கீடு அமலுக்கு வரும். அந்த வகையில், 2029-ஆம் ஆண்டுக்குப் பிறகு மகளிர் இடஒதுக்கீடு நடைமுறைக்கு வரும் என்று மக்களவையில் உள்துறை அமைச்சர் அமித் ஷா தெளிவுபடுத்தியுள்ளார்.

தற்போதைய மக்களவையில் மொத்தம் உள்ள 542 உறுப்பினர்களில் 78 பேர்தான் பெண்கள் (14.39%). மாநில சட்டப்பேரவைகள், யூனியன் பிரதேசங்களில் உள்ள பெண் உறுப்பினர்கள் 8 சதவீதம்தான். இந்திய நாடாளுமன்ற வரலாற்றைப் பொறுத்தவரை இதுதான் அதிகபட்சமான எண்ணிக்கை. ஆனால், அண்டை நாடுகளான நேபாளம், பாகிஸ்தான், வங்கதேசம், இலங்கை ஆகியவற்றைவிட நாடாளுமன்ற பெண் பிரதிநிதித்துவத்தில் இந்தியா பின்தங்கியே இருக்கிறது.

மகளிர் இடஒதுக்கீட்டு மசோதா நிறைவேறிவிட்டதாலேயே மகளிருக்கான அதிகாரம் முழுமையாக வழங்கப்பட்டுவிட்டதாக பொருள் இல்லை. இதை அரசியல் கட்சிகள் எந்த அளவில் பயன்படுத்துகின்றன என்பதைப் பொறுத்துதான் இதன் வெற்றி இருக்கிறது.

ஏனெனில் பஞ்சாயத்துகளிலும், நகராட்சிகளிலும் பெண்களுக்கு இடஒதுக்கீடு அளிக்கும் சட்டத்திருத்த மசோதா 1992-ஆம் ஆண்டு அன்றைய பிரதமர் நரசிம்ம ராவ் ஆட்சிக் காலத்தின்போது நிறைவேற்றப்பட்டு அமலுக்கு வந்தது. அதன்படி, உள்ளாட்சிகளில் மகளிர் பிரதிநிதித்துவம் அதிகரித்திருப்பது என்னவோ உண்மைதான். ஆனால், பெரும்பாலான உள்ளாட்சி பெண் பிரதிநிதியின் பின்னணியில் அவருடைய கணவர் ஆதிக்கம் செலுத்துவதுதான் கள நிலவரம்.

மகளிர் இடஒதுக்கீட்டு மசோதவை ஆதரித்து நாடாளுமன்றத்தில் அனைத்துக் கட்சிகளுமே பேசியுள்ளன. மகளிர் மசோதாவில் எஸ்.சி., எஸ்.டி. பிரிவினருக்கு இடஒதுக்கீடு வழங்கப்படவிருப்பதைப்போல நாட்டின் பெரும்பான்மையாக உள்ள ஓபிசி பிரிவினருக்கும் உள்ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என காங்கிரஸ் கட்சி வலியுறுத்தியுள்ளது. உச்சபட்சமாக, ஓபிசி பிரிவினருக்கு இடஒதுக்கீடு வழங்காததால், இந்த மசோதா முழுமையடையவில்லை எனவும் அக்கட்சி தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் மகளிர் இடஒதுக்கீட்டு மசோதாவை ஆதரித்துப் பேசிய பெரும்பாலான கட்சிகள், இதைத் தங்களது கட்சிகளில் செயல்படுத்த விரும்பவில்லை என்பதையே கடந்தகால புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. 2019-ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட 8,049 வேட்பாளர்களில் பெண்கள் வெறும் ஒன்பது சதவீதம்தான்.

சட்டம் போட்டுத்தான் மகளிருக்கு அதிகாரத்தைப் பகிர்ந்து வழங்க வேண்டும் என்று இல்லாமல், தங்களுக்கு அதிகாரம் இருந்தும் அரசியல் கட்சிகள் இத்தனை ஆண்டுகளாக அதைச் செயல்படுத்தாமல்தான் இருந்தன. அதிலும் தேசிய கட்சிகளைவிட மாநிலக் கட்சிகளில் பெண்களுக்கு தேர்தல் அரசியலில் வாய்ப்பு அளிக்கப்படுவது குறைவு.

மகளிர் இடஒதுக்கீடு அமலுக்கு வந்தாலும், தொகுதி மறுவரையறைப்படி தேர்தலில் நிறுத்த இயலாத ஆண்களுக்கு பதிலாக அவர்களது குடும்பப் பெண்களை நிறுத்துவது போன்ற செயல்பாடுகளை நிறுத்திவிட்டு உண்மையான பிரதிநிதித்துவத்தை மகளிருக்கு அரசியல் கட்சிகள் வழங்கினால் மட்டுமே இந்தச் சட்டம் வெற்றியடைந்ததாகக் கருதப்படும்.

EVA STALIN

# தீனதயாள் உபாத்யாய கொள்கை அடிப்படையில் 9 ஆண்டுகள் ஆட்சி

## 72 அடி உயர சிலை திறப்பில் பிரதமர் மோடி



புது தில்லியில் தீனதயாள் உபாத்யாய சிலை திறப்பு நிகழ்ச்சியில் பங்கேற்ற பிரதமர் மோடி, மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங், பாஜக தேசியத் தலைவர் ஜெ.பி.நட்டா.

**புது தில்லி, செப்.25:** பாஜகவின் முன்னோடி கட்சியான பாரதிய ஜன சங்கத்தின் நிறுவன உறுப்பினரான தீனதயாள் உபாத்யாயவின் கொள்கைகளின் அடிப்படையில் மத்தியில் கடந்த 9 ஆண்டு கால ஆட்சியை நடத்தி வருவதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

தீனதயாள் உபாத்யாயவின் பிறந்த நாளையொட்டி, தில்லி பாஜக தலைமையகம் அருகே அமைக்கப்பட்டுள்ள அவருடைய 72 அடி உயர சிலையை பிரதமர் மோடி திங்கள்கிழமை திறந்து வைத்தார்.

அந்த விழாவில் பேசிய அவர், 'நாடாளுமன்றத்தில் மகளிர் இட ஒதுக்கீடு மசோதா நிறைவேறியது ஜனநாயகத்துக்கு மட்டும் கிடைத்த வெற்றி அல்ல; கட்சியின் கொள்கைக்கும் கிடைத்த வெற்றியாகும். அரசியலில் பெண்களின் பங்களிப்பு இல்லாமல் ஒருங்கிணைந்த சமுதாயம், ஜனநாயக ஒருங்கிணைப்பு ஏற்படும் என்று கூற முடியாது.

தீனதயாள் உபாத்யாயவின் கொள்கைகளான ஒருங்கிணைந்த மனிதநேயம், அடித்தட்டு மக்களை மேம்படுத்துவது ஆகியவற்றின் அடிப்படையில் கடந்த 9 ஆண்டுகளாக மத்தியில் பாஜக ஆட்சியை நடத்தி வருகிறது.

சேவைமனப்பான்மையில் நடைபெறும் இந்த ஆட்சி, சமூக நீதிக்கும், உண்மையான மதச்சார்பின்மைக்கும் எடுத்துக்காட்டாகும்.

நாட்டின் வளங்கள் சிலரது சொந்த தேவைக்காக முன்பு பயன்படுத்தப்பட்டு வந்தது. தற்போது நாட்டின் வளர்ச்சிக்காக பயன்படுத்தப்படுகிறது' என்றார்.

முன்னதாக, எக்ஸ் வலைதளத்தில் தீனதயாள் உபாத்யாயவுக்கு மரியாதை செலுத்திய பிரதமர் மோடி, 'நாட்டிற்காக தனது வாழ்நாள் முழுவதும் செலவிட்டவரின் பணிகள் மக்களை எப்போதும் உத்வேகம் அளிக்கும்' என்று பதிவிட்டார்.

# சி295 விமானம் இந்திய விமானப் படையில் இணைப்பு

**காஸியாபாத், செப்.25:** ஏர்பஸ் நிறுவனத்தின் முதல் சி295 போக்குவரத்து விமானம் இந்திய விமானப் படையில் திங்கள்கிழமை இணைக்கப்பட்டது. இது, இந்திய விமானப் படையின் சரக்குப் போக்குவரத்தை ஊக்குவிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உத்தர பிரதேச மாநிலம் காஸியாபாதில் அமைந்துள்ள ஹிண்டன் விமானப்படைத் தளத்தில் திங்கள்கிழமை இந்த விமான இணைப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், இந்திய விமானப் படைத் தளபதி வி.ஆர்.சௌதரி, ஏர்பஸ் நிறுவன உயரதிகாரிகள் உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

இந்த முதல் சி295 விமானம் விமானப் படையின் வதோதரா விமானப் படை நிலையத்தில் செயல்பட்டுவரும் பழைமைவாய்ந்த 11-ஆவது படைப் பிரிவில் இணைக்கப்பட்டுள்ளது.

ஏர்பஸ் நிறுவனம் ஸ்பெயினின் செவில் நகரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், விமானப்படைத் தளபதி வி.ஆர்.சௌதரியிடம் இந்த விமானத்தை கடந்த 13-ஆம் தேதி முறைப்படி ஒப்படைத்தது. அதனைத் தொடர்ந்து இந்த விமானம் கடந்த 20-ஆம் தேதி வதோத்ரா வந்து சேர்ந்தது.



உ.பி. மாநிலம் ஹிண்டனில் திங்கள்கிழமை நடைபெற்ற சி295 விமான இணைப்பு நிகழ்ச்சியில் பங்கேற்ற பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், மத்திய இணை அமைச்சர் வி.கே.சிங், விமானப் படை தலைமைத் தளபதி வி.ஆர்.சௌதரி.

இந்தியாவிடம் தற்போதுள்ள கனரக போக்குவரத்து விமானங்கள் செல்ல முடியாத இடங்களுக்குக்கூட, 50 முதல் 71 வீரர்களையும், ஏராளமான ஆயுதங்களையும் எடுத்துச் செல்லக்கூடிய திறன் கொண்டது இந்த சி295 விமானம்.

பேரிடர் மீட்பு, கடல்சார் கண்காணிப்பு பணிகளிலும் இந்த விமானத்தைப் பயன்படுத்த முடியும்.

ஏர்பஸ் நிறுவனத்திடமிருந்து ரூ.21,935 கோடியில் 56 சி295 விமானங்களை கொள்முதல் செய்ய இந்தியா கடந்த ஆண்டு ஒப்பந்தம் மேற்கொண்டது.

இதில் முதல் 16 விமானங்களை செவில் நகரில் அமைந்துள்ள ஏர்பஸ் நிறுவன தயாரிப்பு மையத்தில் தயாரித்து ஒப்படைக்கும்.

எஞ்சிய 40 விமானங்கள் இந்தியாவில் டாடா அட்வான்ஸ்ட் சிஸ்டம்ஸ் (டிஏஎஸ்எல்) நிறுவனத்தில் தயாரித்து வழங்கும்.

இதற்காக குஜராத் மாநிலம் வதோதராவில் அமையவுள்ள டாடா நிறுவன உற்பத்தி மையத்துக்கு பிரதமர் நரேந்திர மோடி கடந்த ஆண்டு அக்டோபரில் அடிக்கல் நாட்டினார். இந்த உற்பத்தி மையம் அடுத்த ஆண்டு நவம்பரில் செயல்படத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய விமானப் படையில் 60 ஆண்டுகளுக்கு முன்பாக அறிமுகப்படுத்தப்பட்டு பயன்பாட்டில் இருந்து வரும் ஆவ்ரோ748 விமானங்களுக்கு மாற்றாக சி295 விமானங்கள் அறிமுகப்படுத்தப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

# பூமிக்கு வந்த 'பென்னு' சிறுகோளின் கல், மண் மாதிரிகள்!

**நியூயார்க், செப்.25:** பூமியிலிருந்து சுமார் 200 கோடி கி.மீ. தொலைவில் உள்ள 'பென்னு' எனப்படும் சிறுகோளில் இருந்து கல் மற்றும் மண் மாதிரிகளைச் சேகரித்து வெற்றிகரமாக பூமிக்கு கொண்டுவந்துள்ளது அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா. 'ஒசைரிஸ்-ரெக்ஸ்' விண்கலம் மூலம் இந்த விண்வெளி சாதனையைப் படைத்துள்ளது நாசா.

சூரிய குடும்பத்தில் உள்ள புதன், வெள்ளி, பூமி, செவ்வாய் உள்ளிட்ட கோள்களைப் போல சிறுகோள்களும் சூரியனை நீள்வட்டப் பாதையில் சுற்றி வருகின்றன. இதுவரையிலான ஆய்வின்படி மொத்தம் 1.31 லட்சம் சிறுகோள்கள் விஞ்ஞானிகளால் கண்டறியப்பட்டுள்ளன. இவை ஒரு மீ. விட்ட பாறை முதல் 1000 மீ. விட்டம் வரை இருக்கும்.

சிறுகோள்கள் பூமியின் மீது மோதக்கூடிய ஆபத்து அதிகம் இருப்பதாக விஞ்ஞானிகள் எச்சரிக்கின்றனர். அந்த வகையில் அடுத்த 300 ஆண்டுகளில் பூமியின் மீது பென்னு சிறுகோள் மோதக்கூடிய ஆபத்து அதிகமாகவே உள்ளது எனவும் கண்டறிந்துள்ளனர். இந்த பென்னு சிறுகோள் 450 கோடி ஆண்டுகளுக்கு முற்பட்டதாக அல்லது பூமி தோன்றுவதற்கு முன்பே தோன்றியதாக இருக்கலாம் என விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

பென்னு சிறுகோளை ஆய்வு செய்தால் சூரிய குடும்பத்தின் தோற்றம், கோள்களின் தோற்றம், பூமியில் உயிர்கள் வாழ்வதற்கு வழிவகுத்த உயிரினங்கள் மற்றும் தண்ணீரின் தோற்றம் குறித்து அரிய அறிவியல் உண்மைகள் தெரியவரலாம் என்பதால் பென்னு சிறுகோளிலிருந்து கல் மற்றும் மண் மாதிரிகளைச் சேகரிக்க நாசா முடிவு செய்தது.

## நாசா சாதனை



'பென்னு' சிறுகோளிலிருந்து கல், மண் மாதிரிகளைச் சேகரித்துக்கொண்டு அமெரிக்காவின் உட்டா மாகாணத்தில் உள்ள பாலைவனத்தில் தரையிறங்கிய ஒசைரிஸ்-ரெக்ஸ் விண்கலத்தின் கொள்கலன்.

அதன்படி, ஒசைரிஸ்-ரெக்ஸ் விண்கலம் 2016, செப். 8-ஆம் தேதி பென்னுவை நோக்கி அனுப்பப்பட்டது. 2018, டிச. 3-ஆம் தேதி பென்னு சிறுகோளை அடைந்தது விண்கலம். அந்தச் சிறுகோளில் பாதுகாப்பான முறையில் கல், மண் மாதிரிகளைச் சேகரிப்பது எவ்வாறு என்பது குறித்து 2019, 2020 ஆகிய இரு ஆண்டுகள் விண்கலம் ஆய்வுப் பணியில் ஈடுபட்டது. இறுதியாக, 2020, அக். 20-ஆம் தேதி சிறுகோளின் தரைப்பரப்பிலிருந்து கல் மற்றும் மண் மாதிரிகளை ஒரு கொள்கலனில் விண்கலம் சேகரித்தது.


பின்னர், பூமியை நோக்கி ஒசைரிஸ்-ரெக்ஸ் விண்கலத்தின் பயணம் 2021, மே 10-இல் தொடங்கியது. சுமார் இரு ஆண்டுகள் பயணம் செய்த பிறகு பூமியிலிருந்து ஒரு லட்சம் கி.மீ. தொலைவில் கொள்கலனை விடுவித்தது ஒசைரிஸ்-ரெக்ஸ் விண்கலம். அங்கிருந்து பூமியின் வளிமண்டலத்தை நோக்கி மணிக்கு 44,500 கி.மீ. வேகத்தில் விரைந்து வந்தது கொள்கலன்.

பூமியின் வளிமண்டலத்தில் நுழைந்த 13-ஆவது நிமிடத்தில் அமெரிக்காவின் உட்டா மாகாணத்தில் உள்ள பாலைவனப் பகுதியில் இந்திய நேரப்படி அந்தக் கொள்கலன் ஞாயிற்றுக்கிழமை இரவு 8.22 மணிக்கு தரையிறங்கியது. அதில் இணைக்கப்பட்டிருந்த இரு பாராசூட்கள் உரிய நேரத்தில் விரிந்து கொள்கலன் தரையில் பாதுகாப்பாகத் தரையிறங்க உதவின. அங்கிருந்து தற்காலிக ஆய்வறைக்கு கொள்கலனை நாசா விஞ்ஞானிகள் கொண்டு சென்றனர்.

பின்னர், ஹெலிகாப்டர் மூலம் அந்தக் கொள்கலன் ஹூஸ்டனில் உள்ள நாசாவின் ஜான்சன் விண்வெளி மையத்துக்கு கொண்டு செல்லப்பட்டது.

'பென்னு சிறுகோளில் இருந்து மாதிரிகளைச் சேகரித்து பூமிக்குக் கொண்டுவந்தது ஒசைரிஸ்-ரெக்ஸ் குழுவினருக்கு மட்டுமன்றி ஒட்டுமொத்த அறிவியலுக்கும் ஓர் அசாதாரண சாதனை' என இத்திட்டத்தின் முதன்மை ஆராய்ச்சியாளர் டண்டே லாரட்டா தெரிவித்தார்.

கொள்கலனில் உள்ள சுமார் 250 கிராம் எடைகொண்ட மாதிரியை ஆய்வு செய்ய உள்ள நாசா விஞ்ஞானிகள், அதில் ஒரு பகுதியை உலகின் வேறுசில நாடுகளைச் சேர்ந்த விஞ்ஞானிகளிடமும் ஆய்வுக்காக வழங்கவுள்ளனர். பிரபஞ்சத்தின் ரகசியங்களை அறிய பென்னு சிறுகோளின் மாதிரிகள் உதவுமா என்பது என்பது விஞ்ஞானிகளின் ஆய்வுக்குப் பின்னர் தெரியவரும்.







### சுவாரசியங்கள்...

பென்னு சிறுகோளை 1999-இல் 'லைனியர்' ஆய்வு மூலம் கண்டறிந்தது நாசா.

'பென்னு' சிறுகோளுக்கு விஞ்ஞானிகள் முதலில் சூட்டிய பெயர் '1999ஆர்க்யூ36'. ஒன்பது வயது மாணவர் ஒருவர், ஒரு போட்டியில் இந்தச் சிறுகோளுக்கு 'பென்னு' எனப் பெயர் சூட்டி பரிசு பெற்றார்.

'பென்னு' சிறுகோளின் அடர்த்தி நீரைவிட 30 சதவீதமே அதிகம். ஆதலால், பாறைகளின் தளர்வான தொகுப்பாக இந்தச் சிறுகோள் இருக்கலாம் என விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

ஒவ்வொரு ஆறு ஆண்டுகளுக்கு ஒருமுறை பூமியை நெருங்கி வருகிறது 'பென்னு' சிறுகோள்.

'பென்னு' சிறுகோளை பூமியின் வளிமண்டலத்தை நோக்கி விடுவித்துவிட்டு 'அபோபிஸ்' எனும் சிறுகோளை ஆய்வு செய்வதற்காக தனது பயணத்தை மாற்றிக் கொண்டது ஒசைரிஸ்-ரெக்ஸ் விண்கலம்.